நீதித்துறை நடுவர் நீதிமன்றம், தேனி
முன்னிலை : திருமதி. பாரத தேவி, எம்.எல்.,
நீதித்துறை நடுவர் நீதிமன்றம், தேனி.
2026 ஆம் ஆண்டு ஜீலை மாதம் 02–ம் நாள் வியாழக்கிழமை
குற்றவியல் பல்வகை மனு எண் : 1809/2026
CNR No.TNTH020028702026

G. சதீஸ்குமார்
த/பெ. கோபால் ...மனுதாரர்/எதிரி

//எதிர்//

அரசுக்காக– காவல் ஆய்வாளர் அவர்கள்,
அல்லிநகரம் காவல்நிலையம்,
குற்ற எண்.278/2025,
சட்டப்பிரிவு 303(2) BNS

...எதிர்மனுதாரர் /குற்றமுறையீட்டாளர்

இம்மனு இன்றைய தினம் விசாரணைக்கு வந்தபோது மனுதாரர் தரப்பிலும் சொத்தின் உரிமையாளர் தரப்பிலும் வழக்கறிஞர் தரப்பில் திரு.A.ஐஸ்வர்யா, அவர்கள் ஆஜராகியும்,அரசு தரப்பில் அரசு குற்றத்துறை தரப்பில் அரசு குற்றத்துறை வழக்கறிஞர் நிலை–II அவர்கள் ஆஜராகினார். இருதரப்பு வாதங்களை கேட்டும், ஆவணங்களை பரிசீலித்தும் இந்நீதிமன்றம் வழங்கும்...

**உத்தரவு**

1) மனுதாரர் இம்மனுவை அல்லிநகரம் காவல்நிலையம் குற்ற எண்.278/2025, சட்டப்பிரிவு 303(2) BNS வழக்கில் பிரிவு 497, 503 BNSS–ன் தாக்கல் செய்யப்பட்ட மனு Cr.M.P. No.1696/2026 கீழ் வழங்கப்பட்ட உத்தரவில் நிபந்தனை தளர்வு கோரி மனு தாக்கல் செய்துள்ளார்.

**2) மனுவின் சுருக்கம்–**

இவ்வழக்கில் சம்மந்தப்பட்ட வாகனமான T TN 60 B 6949 Auto–வை மனுதாரர்

வசம் இடைக்காலப் பொறுப்பில் பெற்றுக்கொள்ள மனு செய்து Cr.M.P. No. 1696/2026 என நம்பராகி 25.06.2026-ம் தேதி நீதிமன்றத்தால் நிபந்தனைகளுடன் அனுமதிக்கப்பட்டதாகவும், மேற்படி வாகனத்தின் ஒரிஜினல் ஆர்.சி. புக் ஆவணத்தை நீதிமன்றத்தில் ஒப்படைக்க வேண்டும் என உத்தரவு பிறப்பிக்கப்பட்டள்ளதாகவும், மேற்படி வாகனத்தை மனுதாரர் KC மோட்டார்ஸ் பைனான்ஸில் ஆர்.சி புக்கை ஈடாக வைத்து ரூ.56,000க்கு மாத தவணை ரூ.2,800 ஆக சுமார் 20 மாதங்களுக்கு பைனான்ஸ் மூலம் பெற்று கொண்டுள்ளதாகவும், ஆர்.சி புக்கை திரும்ப பெற வேண்டுமெனில் கடன் தொகையை முழுமையாக அடைக்க வேண்டிய சூழல் உள்ள நிலையில் மனுதாரரால் கடன் தொகையை செலுத்த முடியவில்லை என்றும், அசல் ஆர்.சி. புக்கை சமர்பிக்க முடியாத சூழ்நிலையில் நகலை சமர்பிக்க தயாராக உள்ளதாகவும், மேற்படி Cr.M.P. No. 1696/2026 உத்தரவில் உள்ள அசல் ஆர்.சி. புக் ஆவணத்தை நீதிமன்றத்தில் ஒப்படைக்க வேண்டும் என்ற நிபந்தனையை மட்டும் மாற்றம் செய்து மேற்படி வாகனத்தை மனுதாரர் வசம் இடைக்காலப் பொறுப்பில் விடுவிக்க உத்தரவிட வேண்டுமாய் தாழ்மையுடன் கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது.

3) **அரசு மற்றும் எதிர்மனுதாரருக்கு அறிவிப்பு அனுப்பப்பட்டு பதில் பெறப்பட்டது.**

எதிர்மனுதாரருக்கு அறிவிப்பு அனுப்பப்பட்டு பதில் பெறப்பட்டது. அதில், கடந்த 09.06.2026-ம் தேதி அல்லிநகரம் சார்பு ஆய்வாளர் ரோந்து பணியிலிருந்த போது அல்லிநகரம் பாண்டி கோவில் அருகில் சந்தேகம்படியாக நின்றுக்கொண்டிருந்த ஆட்டோவை சோதனை செய்யும்போது மேற்படி ஆட்டோவானது அல்லிநகரம் காவல் நிலைய குற்ற எண்.278/2026 வழக்கில் தொடர்புடையதாக இருந்ததால் ஆட்டோவை சாட்சிகளான அல்லிநகரம், வள்ளிநகரை சேர்ந்த கோபால் மகன் பாலமுருகன், பொம்மையகவுண்டன்பட்டி, முனிசிபாலிடி குடியிருப்பில் வசிக்கும் சண்முகன் மகன் பார்த்திபன் ஆகியோர் முன்னிலையில் அத்தாட்சியில் கைப்பற்றி நிலையம் கொண்டு வரப்பட்டுள்ளதாகவும், மேலும், இவ்வழக்கின் எதிரி தலைமறைவாக இருப்பதாலும், எதிரியை கைது செய்ய வேண்டியிருப்பதாலும், வழக்கானது புலன் விசாரணையில் இருந்து வருவதாலும், மேலும் இவ்வழக்கின் சொத்தினை நீதிமன்றத்தில் ஒப்படைத்து

RPR. No.279/2026 பிரகாரம் பெறப்பட்டுள்ளதாகவும், மேற்படி சொத்தினை மனுதாரர் வசம் ஒப்படைத்தால், மனுதாரர் வேறு நபருக்கு விற்பனை செய்யக்கூடும் என்பதாலும், மேலும் நீதிமன்றத்தில் விசாரணைக்கு ஆஜர்படுத்தாமல் காலதாமதம் செய்யக்கூடும் என்பதாலும், வழக்கின் சொத்தான TN 60 B 6949 Auto–வினை மனுதாரர் வசம் ஒப்படைக்க கடுமையான ஆட்சேபனை தெரிவிக்கப்பட்டுள்ளது.

**3) இரு தரப்பும் கேட்கப்பட்டது. வழக்கு கோப்பு பரிசீலிக்கப்பட்டது.**

1) அதன்படி மனுதாரர்/எதிரி Cr.M.P. No.1696/2026 என்ற மனுவில் வழங்கப்பட்ட உத்தரவில் மனுதாரர்/எதிரி வழக்கு சொத்தின் RC Book–யின் உண்மை நகலை இந்நீதிமன்றத்தில் சமர்பிக்க வேண்டும் என உத்தரவிடப்பட்டுள்ளது என்பது தெரியவருகிறது.

2) எனவே, மேற்படி மனுதாரர்/சொத்தின் உரிமையாளரிடமிருந்து கைப்பற்றப்பட்ட TN 60 B 6949 Autoவின் தற்போது சான்றிட ஆர்.சி.புக் நகலை நீதிமன்றத்தில் ஒப்படைக்க வேண்டும் என்றும், அசல் ஆர்.சி. புக் ஆவணத்தை இரண்டு மாதக் காலத்திற்குள் நீதிமன்றத்தில் ஒப்படைக்க வேண்டும் என்றும், Cr.M.P. No.1696/2026 என்ற மனுவில் பிறப்பிக்கப்பட்ட பிற நிபந்தனைகள் கடைபிடிக்கவேண்டும் என்ற நிபந்தனையுடன் இம்மனு அனுமதிக்கப்படுகிறது.

இவ்வுத்தரவு என்னால் சுருக்கெழுத்து–தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் நேரடியாக கணினியில் தட்டச்சு செய்யப்பட்டபின், என்னால் சரிபார்க்கப்பட்டு பிழை நீக்கம் செய்து இன்று 2026 ஆம் ஆண்டு ஜீலை மாதம் 02–ம் நாள் வியாழக்கிழமை என்னால் திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

BHARATHA DEVI

Digitally signed by BHARATHA DEVI
Date: 2026.07.02 19:37:27 +0530

**நீதித்துறை நடுவர்**
**தேனி.**